பாடம் : தமிழ்மொழி
ஆண்டு : 4
நடவடிக்கை : கருத்துகளை நிரல்படுத்தி முழுமையான தன்கதையை எழுதுக.

# நான் ஒரு பள்ளிக் காலணி

சில நாட்களுக்குப் பிறகு யாரோ என்னைப் பெட்டியிலிருந்து வெளியே எடுத்தனர். அன்று என்னை விலைக்கு வாங்கிய என் எஜமானி விரைவாக என்னைத் தன் கால்களில் அணிந்து கொண்டு பள்ளிக்கு விரைந்தாள். அம்மாணவி சிறிது தூரம்தான் சென்றிராள். எனக்கு உடம்பெல்லாம் வலிக்க ஆரம்பித்தது. நடக்கும் பாதையெல்லாம் அசுத்தமாகவும் அருவருப்பாகவும் இருந்தது. என் மனம் வேதனையில் துடித்தது.

நான் ஒரு பள்ளிக் காலணி. நான் வெள்ளை வண்ணத்தில் காட்சியளிப்பேன். நான் ரப்பராலும், துணியாலும் தயாரிக்கப்பட்டேன். நான் குறிப்பாக பள்ளிச் சிறுவர்களுக்காகவே உருவாக்கப்பட்டவன். என் பெயர் “பாலாஸ்”. என்னுடன் ஆயிரக்கணக்கான நண்பர்கள் பிறந்தார்கள். ஒருநாள் எங்களை ஜப்பான் தொழிற்சாலையிலிருந்து , மலேசியாவிற்கு விமானம் மூலம் இறக்குமதி செய்தனர்.

மகிழ்ச்சியான என் வாழ்க்கைப் பயணம் நீடிக்கவில்லை. என் எஜமானி பெரிய மாணவியானாள், நானோ அவளுடைய கால்களுக்குப் பொருந்தவில்லை. அவள் என்னை மரப்பேழைக்குள் ஓர் ஓரத்தில் வைத்துவிட்டுப் புதியதாக ஒரு காலணியை வாங்கினாள். நானும் ஏக்கத்துடன் காத்துக்கொண்டே இருக்கிறேன்.

பள்ளி முடிந்து வீட்டை அடைந்த என் எஜமானி, என்னைக் குளியல் அறைக்குத் தூக்கிச் சென்று, வழலைக் கட்டியக் கொண்டு என்னைக் குளிப்பாட்டி, வெள்ளை பூசி, வெயிலில் உலர வைத்தாள். நாட்கள் கடந்தன, அம்மாணவி என்னை மிகவும் தூய்மையாக பராமரித்து வந்தாள். சக நண்பகளுடன் ஒப்பிடுகையில் நான் அதிர்ஷ்ட்டசாலி. ஏனெனில், முதல் நாளே வாழ்க்கையை வெறுத்திருந்தாலும், என் எஜமானியின் அளவிலா அன்பினாலும் , அரவணைப்பாலும் நான் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தேன்.

இரண்டு மணி நேரப்பயணத்திற்குப் பிறகு, நாங்கள் அனைவரும் மலேசிய துறைமுகத்தை அடைந்தோம். அங்கு எங்களைக் கனவுந்தில் ஏற்றி ஈப்போவில் அமைந்துள்ள “இயோன்” எனும் பேரங்காடிக்குக் கொண்டு சென்றனர். எங்களை அங்குள்ள வேலையாட்கள் கண்ணாடிப் பேழைக்குள் அடுக்கினர் , என் மேல் RM 60 என் ஒட்டப்பட்டது. பள்ளி திறப்பதற்கு ஒரு மாதம் இருந்தது, வாடிக்கையாளர்கள் எங்களை வாங்குவதற்குப் புற்றீசல் போல் பேரங்காடிக்கு வந்த வண்ணமாக இருந்தனர். ஒரு மாணவி தன் தாயாருடன் நான் இருக்கும் இடத்திற்கு வந்தாள். என்னைத் தன் கால்களில் அணிந்தாள், பின் அவள் என்னை விலை கொடுத்து வாங்கி, அவள் வீட்டிற்குக் கொண்டு சென்றாள்.



1 2 3 4 5



LIVEWORKSHEETS